III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S. NO.34/2014

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 23-09-2019

Name :Sivkumar Caste :
Father's/Husband's Name:Bakthavatchalu Calling :
Age : Religion :
Village : Taluk:

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி- 4வது பிரதிவாதியான என்னுடைய தாயார் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவர் வேலைக்கு எதுவும் போகவில்லை. என்னுடைய தகப்பனார் பக்தவட்சலு காலம் ஆன போது எனக்கு 13 வயது ஆகும். என் தம்பியின் வயது 6 வயதாகும். ஈ செட்யூல் வேலப்பன்சாவடியில் உள்ள சொத்தில் வாதிகளுக்கு 4 ல் 1 பங்கு உள்ளது. செங்கரை மற்றும் கோலடி சொத்துக்களை கிரையம் பெற்ற போது தாமோதரன் உயிருடன் இல்லை என்று சொன்னால் செங்கரை மற்றும் கோலடி சொத்துக்கள் வெவ்வேறு காலகட்டத்தில் வாங்கப்பட்டதாகும் கோலடி சொத்து வாங்கிய போது தாமோதரன் உடன இருந்தார். தாமோதரன் எப்போது இறந்தார் என்றால் 1981ல் இறந்தார் மாதம் நினைவில்லை. கோலடி சொத்து 1980ல் வாங்கப்பட்டதாகும். பி.சா.ஆ.8ல் அடமானது கடன்களை பைசல் செய்வதற்கும் குடும்ப செலவிற்காகவும் ஏற்படுத்தப்பட்டது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் வந்த பணத்தினை விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் பங்குதாரர் நிறுவனத்திற்கும் மற்ற செலவிற்கும் உபயோகப்படுத்தப்பட்டது. விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் நிறுவனத்திற்கு முதலீடு செய்வதற்காக அடமானம் ஏற்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டு பி.சா.ஆ.8ல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லப்படவில்லை ஆனால் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ் நிறுவனத்திற்கும் அடமானத்தில் வந்த தொகையை பயன்படுத்தப்பட்டது. அடமானம் ஏற்பட்ட நேரத்தில் நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். நானும் அதில் கையெழுத்து போட்டுள்ளேன். பி.சா.ஆ.8ல் எதற்காக விஸ்வஜோதி பிரிக்ஸ் ஓர்க்ஸ்க்கும் பணம் முதலீடு செய்ய கடன் பெறுவதற்காக விவரத்தினை குறிப்பிடப்படவில்லை என்ற விவரம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. பி.சா.ஆ.18ன்படி எப் ஷெட்யூல் சொத்து

வாதிகளுக்கு 4ல் 1 பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 644/1 ஏ ஷெட்யூலில் கண்டுள்ள 7வது அயிட்டம் பட்டா எண் 240 சுப்பையா நாயுடு பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன்படி உள்ள பி ஷெட்யூல் சொத்து சர்வே எண் 55/1ல் 8 சென்ட் நிலத்தை பாபு நாயுடு சுப்பையாநாயுடுவிற்கு விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.29ல் டி செஷட்யூல் அயிட்டம் 2 சர்வே எண் 74/1 ல் 16 சென்ட் நிலம் சுப்பையா நாயுடுவிற்கு சொந்தம் என்று சொன்னால் அந்த ஆவணத்தில் டி ஷெட்யூல் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை ஆனால் ஆவணத்தில் சர்வே எண் 74/1 மற்றும் 16 சென்டும் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் இங்கு அந்த சொத்து சுப்பையாநாயுடு பெயரில் இல்லை. தற்போது மேற்சொன்ன சொத்து வேறு யார் பெயரில் உள்ளது என்று காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிகள் 21/01/2014 அன்று வா.சா.ஆ47ன்படி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றாலும் அதற்கு நாங்கள் பதில் கொடுத்தோமா என்றால் பதில் கொடுக்கவில்லை ஆனால் அதற்குள்ளாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியாது தோராமையாக ஏப்ரல் 2014ல் தாக்கல் செய்யப்பட்டது. என் பிரகாரம் நோட்டீஸ் கொடுத்து 3 மாதங்கள் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரீஸ் பெயரில் கிரையம் பெற்றதாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் தவறாகும். விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரீஸ் பெயரில் கிரையம் பெற்றதற்குண்டான எந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறான எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 07/09/2009ல் பாகப் பிரிவினை பத்திரம் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் யார் யார் கையொப்பம் இட்டார்கள் என்றால் 12 தரப்பினர்கள் கையெழுத்திட்டனர். நான், மற்றும் என்னுடைய சகோதரர் கா்ர்த்திக், என்னுடைய அம்மா சாந்தி, என்னுடைய பெரியம்மா சுலோச்சனா, என்னுடைய பெரியம்மாவின் மகன் கோபால், என்னுடைய சித்தப்பாவின் மகன் தினகர், சித்தப்பாவின் மற்றொரு மகன் பிரசாத், என்னுடைய சித்தி சுகந்தி, என்னுடைய பெரியப்பாவின் மகள் சரஸ்வதி, பெரியம்மாவின் மகள் ராஜலட்சுமி, பெரியம்மா விஜயா, என்னுடைய அத்தை வனஜா ஆகியோர்கள் கையொப்பம் இட்டார்கள். மேற்சொன்ன பாகப்பிரிவினை பத்திரத்தின்படி யார் யாருக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சுப்பையாநாயுடு பெயரில் உள்ள சொத்துக்கள் 5ல் 1 பங்கு மேற்சொன்ன 12 பேருக்கு ஒதுக்கப்பட்டது. அதேபோல் சுப்பையா நாயுடுவின் 4 மகன்களுக்கு

அவர்களெல்லாம் சேர்ந்து வாங்கிய சொத்தை 4 பங்காக பிரித்து வனஜா தவிர்த்து மற்ற எல்லோருக்கும் ஒதுக்கப்பட்டது. வாதிகளுக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் வழக்கு சொத்தில் ஏ பட்டிகை சொத்தில் அயிட்டம் 1 லிருந்து 7, 12லிருந்து 15 அதில் 5ல் 1 பாகம் ஒதுக்கப்பட்டது. அதேபோல் ஏ பட்டிகை சொத்தில் அயிட்டம் 8 முதல் 11 மற்றும் 16 அதில் 4ல் 1 பாகம் ஒதுக்கப்பட்டது. டி பட்டிகை சொத்தில் அயிட்டம் 4 மற்றும் ஈ பட்டிகை சொத்தில் 4ல் 1 பாகமும் எப் ஷெட்யூலில் 4ல் 1 பாகமும் ஒதுக்கப்பட்டது. மேற்சொன்னவாறு வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் அந்த ஆவணம் என்னுடைய கைவசம் இல்லை. அந்த ஆவணம் பதியப்பட்டதா என்றால் இல்லை. அந்த ஆவணம் ஏன் பதியப்படவில்லை என்றால் கூடுதல் முத்திரை கட்டணம் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆவணம் தற்போது யார்வசம் உள்ளது என்று தெரியாது. அந்த ஆவணம் சம்பந்தமாக நான் மேல் நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் நான் எதுவும் எடுக்கவில்லை. ஏன் என்றால் மற்ற தரப்பினர்கள் புகார் கொடுத்ததாக சொன்னார்கள் அதனால் எடுக்கவில்லை. புகார் யார் கொடுத்தார்கள் என்றால் என்னுடைய பெரியம்மா சுலோச்சனா மற்றும் அவருடைய மகன் கோபால் கொடுத்ததாக சொன்னார்கள். என்ன புகார் கொடுக்கப்பட்டது என்றால் பதிவுத் துறை அலுவலகத்தில் டாக்குமெண்ட் பதியப்படாமல் உள்ளது என்று புகார் கொடுத்துள்ளார்கள். சாந்தி மற்றும் சுகந்தி சேர்ந்து சுலோச்சனா மற்றும் விஜயாவின் கையெழுத்தை தினகர் போட்டு மனு கொடுத்து ஆவணத்தை பதிவு செய்யாமல் வாபஸ் பெற்றுக் கொண்டனர் என்று சொன்னால் தவறு. இது சம்பந்தமாக முதல் பிரதிவாதி விஜயா சென்னை உயர்நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அதைபற்றி தெரியும். அந்த வழக்கு என்ன ஆனது என்று தெரியுமா என்றால் அந்த வழக்கில் விஜயா என்பவர் கையெழுத்து போட்டு வாங்கியதாக தெரிந்து கொண்டேன். இந்த விவரமாக தினகர் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் ஜாமீன் மனு தாக்கல் செய்தாரா என்றால் அந்த வழக்கில் நான் தரப்பினர் கிடையாது. ஆனால் எனக்கு தெரிந்தவரை அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. எப் ஷெட்யூல் அமிஞ்சிகரை சொத்து சம்பந்தமான வாடகை தொகையை 1 முதல் 3 பிரதிவாதிகள் வாங்கி வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். எப் ஷெட்யூலில் எத்தனை வாடகைதாரர்கள் உள்ளார்கள் என்றால் தெரியாது. எப் ஷெட்யூலில் உள்ள வாடகைதாரர்களின் பெயர் மற்றும் அவர்கள் என்ன வியாபாரம் செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எப் பட்டிகை சொத்தை நான் பார்த்துள்ளேன். எப் பட்டிகை சொத்தில் உள்ள இடத்தினை எவ்வளவு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எப் ஷெட்யூல் சம்பந்தமாக வாடகையில் உள்ள பங்கினை கேட்டு எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்று

சொன்னால் சரிதான். ஜி ஷெட்யூல் சொத்து அதாவது அயப்பாக்கத்தில் உள்ள சொத்து கோவிந்தசாமி தன் பணத்தை வைத்து கிரையம் பெற்றார் என்பதற்காக வருமான வரி துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் ஜி ஷெட்யூல் சொத்து எந்த தேதியில் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் அதற்குண்டான ஆவணத்தை வாதிகளே தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கு எண் 6/2011 பூந்தமல்லி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. செங்கல் சூளையிலிருந்து செங்கற்களை திருடி விற்பனை செய்துவிட்டதாக வாதிகள் காவல் நிலையத்தில் புகார் செய்த விஷயம் தெரியுமா என்றால் தெரியாது. 2009ல் பாகப் பிரிவினை பத்திரம் தயார் செய்து அது ரத்தான பிறகு தற்போது வரை எந்த பாகப் பிரிவினை பத்திரமும் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 2009ல் பாகப் பிரிவினை ஆவணம் இந்த தாவாவில் கண்டுள்ள சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் தவறு. கூட்டுக் குடும்ப முறையில் பாகப் பிரிவினை எதுவும் செய்யப்படவில்லை சுப்பையா நாயுடு வாரிசு என்ற முறையில் பாகப் பிரிவினை பத்திரம் 2009ல் ஏற்படுத்தப்பட்டது. பிரதிவாதிகள் 1 முதல் 3 ஆகியோருக்கும் எங்களுக்கும் விரோதம் உண்டா அல்லது சுமுகமாக இருக்கிறோமா என்றால் விரோதம் எதுவும் இல்லை. செங்கரை சொத்து வாங்கும் போது எனக்கு 6 வயதாகும்.. கோலடியில் உள்ள 4 ஏக்கர் 4 செண்ட் இடம் வா.சா.ஆ.28ன்படி கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான்.

வாதி தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்திவைப்பு